# 27-09-2023 செய்தி

## இந்தி நடிகை வகீதா ரகுமான் – தாதா சாகேப் பால்கே விருது

**தாதா சாகேப் பால்கே விருது**

- இந்திய திரைப்படைத்துறை வாழ்நாள் சாதனை புரிவோர்க்கு வழங்கப்படும்
- தொடக்கம் : 1969
- தாதா சாகேப் பால்கே – இந்திய திரைப்பட துறையின் தந்தை
  * பிறப்பு 1870, ஏப்ரல் 30
- மத்திய தகவல் மற்றும் ஒலி பரப்பு அமைச்சகம்
- 53வது தாதா சாகேப் பால்கே விருது

**வகீதா ரகுமான்**

- இந்தி நடிகை
- தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டம் – பிறப்பு
  * பியாசா
  * கைடு

**பெற்ற விருது**

* தேசிய விருது
* பத்மஸ்ரீ
* பத்ம பூஷன்

**பரிசுகள்**

* தங்கத்தாமரை மற்றும் சால்வை
* 10 லட்சம் ரொக்க பரிசு
* 1969 – தேவிகா ராணி

## குதிரையேற்றம்

**ஆசிய விளையாட்டு போட்டி**

- 19வது
- சீனா, ஹாங்சு

**இந்தியா சாதனை**

- குதிரையேற்றம் – கலப்பு அணிகள்
- தங்கம் வென்று சாதனை
  - அனுஷ் அகர்வாலா (71.088 புள்ளி)
  - ஹிரிதே விபுல் (69.941 புள்ளி)
  - திவ்யாக் ரிதி (68.176)
  - சுதிப்தி ஹஜேலா (66.706)
- 41 ஆண்டுக்குப்பின் சாதனை
- 1982 – டெல்லி, தங்கம் வென்று சாதனை
- 1986 – வெண்கலம்

**பாய்மரப் படகு**

- நேஹா – வெள்ளி பதக்கம்

## தேசிய கல்விக் கொள்கை

**தேசிய கல்வி கொள்கை – 2020ன் மீதான விமர்சனம்**

- மாநிலங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை. அதாவது மேலிருந்து கீழான அணுகுமுறை இல்லை.
- தற்போதைய, பாராளுமன்ற நிலைக்குழுவின் தரவு – 1043 பல்கலைக்கழகங்களில் 70% மாநில சட்டத்தின் கீழ் செயல்படுகிறது.
- 94% மாணவர்கள் மாநில அல்லது தனியார் கல்வி நிறுவனங்களின் கீழ் உள்ளன. 6% சதவீதம் மாணவர்கள் மட்டுமே மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களின் கீழ் உள்ளனர்.
- நோக்கம் – கல்விக்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொது செலவிலிருந்து, தற்போதுள்ள அளவான 4.43% லிருந்து 6% ஆக அதிகரித்தல்.
  * உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தெளிவாக வரையறுப்படவில்லை, எவ்வாறு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிரப்பட வேண்டும் என குறிப்பிடப்படவில்லை.
- 5ம் வகுப்பு வரை பயிற்று மொழியாக தாய்மொழி மூலம் கற்பித்தல்
  * தரம் 3 வரை இதர மொழிகளில் எழுத மற்றும் படிக்கும் திறனை வழங்குதல்.
- மும்மொழிக் கொள்கையை செயல்படுத்தல் – தமிழக அரசால் எதிர்க்கப்படுகிறது.
- பல்முனை நுழைவு மற்றும் வெளியேற்றத்தை செயல்படுத்துதலில் உள்ள பிரச்சினை
  * மாணவர் – ஆசிரியர் விகிதத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.
- மாணவர்கள் இடையிலேயே நிற்பதை ஊக்குவிக்கும்.
- உயர்கல்வியை தனியார்மயமாக்குதல் – சமூக நீதி மறுக்கப்படும்.

## பெண் விஞ்ஞானிகளே....

**செய்திகளில்**

**ஐ.நா 8வது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சர்வதேச மாநாடு**

- நடைபெற்ற இடம் – நியூயார்க் (ஐ.நா தலைமையிடம்)
- நடைபெற்ற நாள் – பிப்ரவரி 10, 2023

**அறிவிப்பு**

- ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 11ம் தேதி – அறிவியலில் பெண்களுக்கான சர்வதேச தினம்

**இந்தியாவில் பல்வேறு துறைகளின் உயரிய விருதுகள்**

பத்ம விருதுகள்

- குடியரசுதலைவர் வழங்கக்கூடியது
- ஒரு வருடத்திற்கு 120 விருதுகள் வரை வழங்கலாம்
- பாரத ரத்னா, பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ

**சாகித்ய அகாடமி**

- இலக்கியம், மொழிபெயர்ப்பு
- ஆண்டுதோறும், 60 பேருக்கு விருதுகள்
- யுவ புரஷ்கார், பால புரஷ்கார் விருதுகள்

**கேல் ரத்னா**

- விளையாட்டுத் துறை
- அர்ஜீனா விருது, துரோணாச்சார்யா விருது
- வருடத்திற்கு 180 பேருக்கு மேல்

**சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது**

- அறிவியல் துறை
- காலம் தாழ்த்தி வழங்கப்படுகிறது
- 2022 – 12 நபர்
- ஒருவர் கூட பெண் இல்லை

**இந்திய அறிவியலும், பெண்களும்:**

- இந்திய விஞ்ஞானிகள் என்றால் ஆண்பால் தான் என்றாகி விட்டது.
  - சர்.சி.வி ராமன் முதல் வீர முத்துவேல் வரை
- இக்கருத்தை எதிர்த்து செயல்பட்டு விஞ்ஞானத்தில் சிறந்த பெண்கள்
  - கமலா சோஹோனி – பெங்களூர் இந்திய ஆய்வு நிறுவனத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்
  - அண்ணா மணி – தட்பவெப்ப அறிவியலின் 7 இந்திய வானியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் அடிப்படைக் கருவிகளை கண்டுபிடித்து கொடுத்தவர்.
  - பீபா சௌத்ரி – துகளியல் விஞ்ஞானி, தன் பெயரில் நட்சத்திரத்தை கொண்டவர்.
  - இந்திரா ஹந்துஜா – செயற்கை கருத்தரிப்பு முறையை தந்தவர்.
  - ராஜேஸ்வரி – முதல் இந்திய பெண் பொறியாளர், நுண்கலை பொறியியல் மூலம் ஆண்டனா, வாக்கி டாக்கி தந்தவர்.
  - இ.கே. ஜானகி தாவரவியல் விஞ்ஞானி, இனிப்பு ராணி, சர்க்கரைக்கான உயர் கரும்பு ரகத்தை வழங்கியவர் 1977 ல் பத்ம ஸ்ரீ விருது பெற்றார்.

**அதிர்ச்சி தரும் அம்சங்கள்**

- இந்தியாவின் உயரிய அறிவியல் விருது – சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது.
  - 1958, செப்டம்பர் 26
  - சிஎஸ்ஐ ஆர் முதல் தலைவரின் பெயரில்

**நோக்கம்**

- இந்தியாவிலேயே வாழ்ந்து, இங்கேயே அறிவியலில் மகத்தான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும் விஞ்ஞானிகளை அங்கீகரித்தல்
- விருதுத் தொகை ரூ.5 லட்சம்
- 65 வயது வரை, மாதம் ரூ.15,000
- இதுவரை 583 விஞ்ஞானிகள் விருது பெற்றுள்ளனர்.
  - பெண்கள் 19 பேர் – 3% விட குறைவு
  - எம்.எஸ்.சுவாமிநாதன், சின்.ஆர்.ராவ் உட்பட

**தீர்வு**

- பெண் விஞ்ஞானிகளின் சாதனைகளை அங்கீகரிக்க தனி விருதுகள் துறைவாரியாக தேவை
  - ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல், சீனா போன்று

## காசநோய்

**காசநோயாளிகள்**

- உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை – 2022
  - உலக மக்கள் தொகையில் கால் பங்கு பேர்.
  - காசநோயால் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு நபர் இந்தியர்.
- 2025 – காசநோய் ஒழிக்க இந்தியா இலக்கு
- 2030 – உலகளவில் காசநோய் ஒழிக்க ஐ.நா இலக்கு

**149வது நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கை**

- தனியார் துணையை நாடாமல் அரசே இலக்கை அடைய வேண்டும்.
- 'நிக்ஷய் மித்ரா' திட்டத்தின் மூலம் 58 சமூகப் பொருளாதார பாதிப்புகள் அகற்றம்
- பிரதமரின் காசநோய் 'அகன்ற பாரதம்' திறம்பட செயல்படுத்த வேண்டும்.

**நிலைக்குழுவின் குற்றச்சாட்டு**

- நிக்ஷய் மித்ரா திட்டத்தின் நோக்கம்
  - தனி நபர்களாலோ, அமைப்புகளாலோ, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோ காச நோயாளிகளை தத்தெடுத்து அவர்களின் நலன், மருத்துவ செலவு பேண வேண்டும்.
- அதாவது. அரசு துறைகள் தங்களது பொறுப்பை தட்டி கழிக்க முயற்சி
- மக்கள் தொகையில் உழைக்கும் பிரிவினர் (18 முதல் 50 வயது) அதிகமான தொற்று

**2022 ஆய்வு**

- மக்கள் தொகையில் 44% ஊட்டச்சத்து குறைபாட்டுடன் உள்ளனர்.
- 12 லட்சத்துக்கும் அதிகமானோர் காச நோயால் பாதிப்பு – ஆண்டுதோறும்

**மத்திய அரசின் முன்னெடுப்பு**

- 2022 செப்டம்பர் – நிக்ஷய் மித்ரா
  - நோயாளியின் ஒப்புதலுடன் ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்
- 2018 நிக்ஷய் போஷன் யோஜனா
  - ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்
  - நேரடி மானியம் வழங்கும் திட்டம் – மாதம் ரூ.500

**திட்டத்தின் மீதுள்ள விமர்சனம்**

- இந்திய காசநோய் அறிக்கை 2023
  - 24 லட்சம் காச நோயாளிகள் உள்ளனர்.
  - 16 லட்சம் பேர் (66%) மட்டும் – ஒரு மாதம் மட்டும் மானியம் பெற்றுள்ளனர்.

**தீர்வு**

- 70% நோயாளிகள் குணமடைய ஊட்டச்சத்து உணவு வழங்க வேண்டும்.

SURESH

# திபெத் தலாய் லாமா

- 1951க்கு முன் – மதம் சார் அரசாங்கம் – தலாய் லாமா, மத அடிப்படையில் உச்ச தலைவர்
- 1914 சிம்லா மாநாட்டில் திபெத் உடன் பிரிட்டிஷ் இணைந்து கையெழுத்திட்டது.
  - திபெத் – யை தனி அரசாக அங்கீகரித்தல்
  - சீனா இம்மாநாட்டை நேரடி சவாலாக ஏற்றது.
  - திபெத் அரை சுதந்திர பாதுகாப்பு பெற்றது.
- 1949 மா சேதூங் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது.

**இந்தியாவின் திபெத் கொள்கை**

- இந்தியாவானது, திபெத் யை சீனாவின் கீழ் உள்ள தன்னாட்சி பெற்ற பிராந்தியமாக அங்கீகரித்தது.
- தலாய் லாமாவிலிருந்து அடைக்கலம் மற்றும் தர்மசாலாவில் நாடுகடத்திய திபெத் அரசு
- சீன அரசுக்கும், திபெத்திய தலைமைக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வு காண முயல்கிறது.

# நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர்

**செய்தி**

- நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர்
  - செப்டம்பர் 18-22, 2022
- வரலாறு சிறப்புமிக்க – மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றம்

**நாடாளுமன்றம் எப்போது கூட்டப்படுகிறது?**

- நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடருக்கு அழைப்பு அதிகாரம்
  - அரசமைப்பு படி – மத்திய அரசு
  - முதலில் அமைச்சரவை குழு முடிவெடுக்கும்
  - பின் – குடியரசு தலைவர்களால் முறைப்படுத்தப்படும்.
- விதி 85 – நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது / கலைப்பது தொடர்பானது
  - குடியரசுத் தலைவர் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூட்ட வேண்டும்.
  - ஆண்டிற்கு இரண்டு முறை
- 1949, விதி 69 – வரைவு, பரிசீலனை எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மக்களின் பிரச்சினைகள் பற்றி விவாதிக்க கூடுதல் நேரம் ஒதுக்க நாடாளுமன்ற கூட்டங்களின் இடைவெளியை 3 மாதமாக மாற்ற முன் மொழியப்பட்டது.

**நாடாளுமன்ற கூட்டத் தொடரின் முக்கியத்துவம் என்ன?**

- ஆங்கிலேயர் காலத்தின் சூழலுக்கு ஏற்ப நாடாளுமன்றத்துக்கான வரைவு சட்டங்கள் அமைக்கப்பட்டன.
- முன்பு – நிதி அனுமதி பெற மட்டுமே சபைகள் கூட்டப்பட்டன
- நாட்டின் வளர்ச்சி, எதிர்காலத்தை நிர்ணயிக்க சட்டங்களை பரிசீலனை செய்ய, விவாதிக்க நாடாளுமன்ற கூட்டத்தொடர் முக்கியமானது.
- இதில், சரியான பரிசீலனையை அனுமதிப்பதற்கு நேரமும், ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. எனவே நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு இடையேயான இடைவெளி மூன்று மாதங்களுக்கு மிகாமல் இருக்கப் பரிந்துரைக்கிறேன்.
  - கே.டி.ஷா (மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
- ஹெச்.வி காமத் – அமெரிக்கா, பிரிட்டன் போன்று நாடாளுமன்ற கூட்டத்தொடர் நீண்ட காலம் நடைபெற வலியுறுத்தினார்.
- அம்பேத்கர் – அரசமைப்பு விதிகள் நாடாளுமன்றம் அவ்வப்போது கூட்டப்படுவதைத் தடுக்காது. எனினும் கூட்டத்தொடர்கள் அடிக்கடி நடக்கும் போது உறுப்பினர்கள் சோர்வடைந்து விடுவார்கள் என்பதே அச்சம் .

**நிலையான கால அட்டவணை உள்ளதா?**

- நாடாளுமன்ற கூட்டத் தொடருக்கு நிலையான கால அட்டவணை கிடையாது.
- இந்தியாவில் 3 முறை கூட்டத்தொடர்
  - நிதிநிலை கூட்டத்தொடர் (ஜனவரி – ஏப்ரல் இறுதி)
  - மழைக்கால கூட்டத் தொடர் – (ஜீலை – ஆகஸ்ட்)
  - குளிர்கால கூட்டத் தொடர் – (நவம்பர் – டிசம்பர்)

**சிறப்பு கூட்டத்தொடர் எப்போது நடத்தப்படுகிறது?**

- சிறப்பு கூட்டத்தொடர் சொல்
  - அரசமைப்புச் சட்டம் – இல்லை
  - இரு அவைகளின் விதி புத்தகத்தில் இல்லை
- சிறப்புக் கூட்டத் தொடரை எப்படி, எப்போது கூட்டலாம் என்பதற்கான வழிகாட்டுதல் அரசமைப்பில் இல்லை
- விதி 352 – நெருக்கடிநிலை பிரகனடத்தில், நாடாளுமன்ற அவையின் சிறப்புக் கூட்டத் தொடர் குறித்து குறிப்பிடுகிறது.
  - நள்ளிரவு கூட்டத்தொடர் உட்பட

**இதற்கு முன்**

- 1947 – இந்தியாவின் அதிகார மாற்றப்பட்டதை குறிக்கும் நோக்கில்
  - நாட்டின் முதல் சிறப்பு கூட்டத்தொடர்
- 1962 – இந்தியா – சீன போர்
  - சீன ஆக்கிரமிப்பு குறித்து விவாதிக்க
- 1972 – சுதந்திரத்தின் 25 ஆண்டு குறிக்கும் வகையில்
- 1977 – தமிழ்நாடு, நாகலாந்து மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சியை நீட்டிக்க
- 1991 – ஹரியானா குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு ஒப்புதல் அளிக்க
- 1992 – வெள்ளையனே வெளியேறு – 50 ஆண்டு விழா – நள்ளிரவு
- 1997 – ஆகஸ்ட் – சுதந்திரம் அடைந்து 50 ஆண்டு
- 2008 – மன் மோகன் சிங் – ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து இடதுசாரிகள் வெளியேறிய பின் மக்களவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு
- 2017 – ஜூன் ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்த நள்ளிரவு கூட்டத் தொடர்
- 2023 செப்டம்பர் 18-22 – பா.ஜ க அரசின் இரண்டாவது கூட்டத் தொடர்.
  - கேள்வி நேரம், பூஜ்ய நேரம் இல்லாமல் நடத்தப்பட்டது.